ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

# ॥ ஸ்ரீ வேதாந்தராமானுஜமஹாதேஶிகன் வாழித்திருநாமம், திருநாள் பாட்டு ॥

*This document** *has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

*ஸ்ரீ ரங்கராமாநுஜ மஹாதேஶிகன்*

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:
ஶ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:

# ॥ ஶ்ரீ வேதாந்தராமாநுஜமஹாதேஶிகன் வாழித்திருநாமம், திருநாள் பாட்டு ॥

நமஸ்தஸ்மை ஶ்ரீநிவாஸமுநயே முக்தித$_3$ாயிநே ।
வேத$_3$மௌலியதிக்ஷ்மாப்$_4$ருத்ப்ராப்தஸார்வஜ்ஞஶாலிநே ॥

ரங்க$_3$நாத$_2$த$_3$யாபாத்ரம் ஶ்ரீநிவாஸபத$_3$ாஶ்ரிதம் ।
ஶ்ரீமந்தம் ஶ்ரீ வேத$_3$சூட$_3$ாலக்ஷ்மணாக்$_2$யம் கு$_3$ரும் ப$_4$ஜே ॥

வாழி திருக்குடந்தை மாநகர்சீர் மாதகவால்
வாழிய வேதாந்தராமானுசனும் - வாழியவே
வேதமெல்லாம் சீர் தமிழின் மாமறையும்
தீதற நங்கட்கருளும் சீர்

ஆரணப்பொருள் உலகில் அருள வந்தோன் வாழியே
ஆழ்வார்கள் அருளுருவாய் அவதரித்தோன் வாழியே
ஆராதவமுதத்தில் ஆழ்ந்திருப்போன் வாழியே
அன்பிற்கோர் இலக்கணமாய் அமைந்திட்டான் வாழியே
பூரணமாம் ஞானமதை புவிக்களித்தோன் வாழியே
புனித பதம் புவியெல்லாம் பெற நடந்தான் வாழியே
வேரிட்ட புறச்சமயம் வீழவந்தோன் வாழியே
வண் குடந்தை வேதாந்த யதிராசன் வாழியே

வேதமெல்லாம் வாழவே வேதியர்கள் தாம் வாழ
கோதில் குருகைக்கோன் பேர் வாழ - தீதறவே
மன்னிய வேதாந்த ராமானுசனென்னும் மாமுனியே
இன்னுமொரு நூற்றாண்டிரும்

வேத விழுப்பொருள் மேதினிமீது விளங்கிடும் உத்தம நாள்
விண்ணவரும் பிறமண்ணவரும் தம்வாழ்வை உகந்திடு நாள்
தீதற மண்ணில் இராமானுசனுரை திண்ணியதாகிடு நாள்
தேமதுரத்தமிழ் மாமறை மேவிடத் தீர்த்தர் உகந்திடு நாள்

prapatti.com

வாதியரிங்கு நமக்கிலைவாழ்வென வீழ்ந்து பணிந்திடு நாள்
வண் புகழ் தேசிகர் காட்டிய தொன்னெறி வளர அமைந்திடு நாள்
வேதமுடித் திருராமானுசமுனி வந்து பிறந்திடு நாள்
வான்புகழ் பங்குனிப்பூசம் என்பெயர் வளமிகு திரு நாளே

prapatti dot com